**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1225/2022 P.W.5**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அண்ணாதுரை | த–பெ | பாண்டி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.02.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2**. தேதி மாதம்நினைவில் இல்லை. சுமார் 10 வருடங்களுக்கு முன்பு நான் ஆட்டோ ஓட்டிக்கொண்டிருந்தபோது எங்கள் பகுதியை சார்ந்த ரத்தினம் என்பவருக்கு சாலை விபத்து ஏற்பட்டதாக சொன்னார்கள். மேலும் சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனையில் வைத்திருப்பதாக சொன்னார்கள். அங்கு சென்று அவரை நான் பார்த்தேன். பின்னர் போலீசார் தயார் செய்த பார்வை ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

கையொப்பம் எங்கு வைத்து செய்தேன் என்றால் மருத்துவமனையில் வைத்து செய்தேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.19 16:29:38 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1225/2022 P.W.4**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஆறுமுகம் | த–பெ | கண்ணப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 42/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஒப்பந்தக்காரர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.02.2026**
**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஒப்பந்தக்காரராக வேலை செய்து வருகிறேன். கடந்த 27.02.2019 அன்று எங்கள் பகுதியை சார்ந்த ரத்தினம் என்பவருக்கு சாலை விபத்து நடந்ததாக சொன்னார்கள். அதன்அடிப்படையில் நான் காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோத அவர் சிசிக்சையில் இருந்தார். அவருக்கு எங்கு காயங்கள் ஏற்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு நியாபகம் இல்லை. போலீசார் வழக்கு சமயத்தில் என்னை விசாரணை செய்யவில்லை. எந்த ஒரு சம்பவத்தையும் நான் நேரடியாக பார்க்கவில்லை. எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 27.02.2019 அன்று மதியம் 2.00 மணியளவில் எங்கள் பகுதியை சார்ந்த நபர்களுடன் செல்வ விநாயகர் கோவில் முன்பாக பேக்கரியில் டீ சாப்பிட்டு கொண்டிருந்தபோது தெற்கில் இருந்து வடக்கு நோக்கி வந்த இருசக்கர வாகனத்தில் குமார் மற்றும் ரத்தினம் ஆகியோர் வந்ததாகவும் சம்பவ சாலையில் திடீரேன குமார் பிரேக் அடித்ததால் பின்னால் அமர்ந்திருந்த ரத்தினம் நிலை தடுமாறி கீழே விழுந்து நினைவின்றி இருந்ததாகவும் பின்னர் அருகில் இருந்தவர்கள்

உதவியுடன் காரைக்குடி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் சேர்த்ததாகவும் விபத்து சம்பவத்தை நேரடியாக பார்த்து விட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.19 16:29:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.